செய்தி வெளியீடு எண்: 09 நாள் : 05.01.2011

## பால் உற்பத்தியாளர்களின் நலன் கருதி பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்கிட முதலமைச்சர் கலைஞர் ஆணை!

2006ஆம் ஆண்டு முதலமைச்சர் கலைஞர் தலைமையிலான அரசு ஆட்சிப் பொறுப்பேற்றபின், பால் உற்பத்தியாளர்களின் நலன் கருதி, 7.3.2007 அன்று 10 ரூபாய் 50 காசுகள் என இருந்த பசும்பால் கொள்முதல் விலையினை 1 ரூபாய் 50 காசுகள் உயர்த்தி, 12 ரூபாய் என கொள்முதல் செய்யப்பட்டது. அதன் பின்னர் 10.3.2008–ல் அதனை மேலும் 2 ரூபாய் உயர்த்தியும், 1.9.2009 அன்று 2 ரூபாய் உயர்த்தியும், ஆக மொத்தம் கடந்த 4 ஆண்டுகாலத்தில் பசும்பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு 5 ரூபாய் 50 காசுகள் என கொள்முதல் விலையை உயர்த்தியும், எருமைப் பாலுக்கு 7.3.2007–ல் 1 ரூபாய் 50 காசுகளும், 10.3.2008–ல் 4 ரூபாயும், 1.9.2009–ல் 5 ரூபாயும் உயர்த்தி, கூடுதலாக எருமைப்பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு 10 ரூபாய் 50 காசுகள் என கொள்முதல் விலை உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுது பால் உற்பத்தியாளர்களின் நலன் கருதி, பால் கொள்முதல் விலையினை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் முதலமைச்சர் கலைஞர் அவர்கள், பசும்பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு 1 ரூபாய் 10 காசுகளும், எருமைப்பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு 2 ரூபாய் 20 காசுகளும் உயர்த்தி வழங்கிட இன்று (5.1.2011) ஆணையிட்டுள்ளார். இந்த கொள்முதல் விலை உயர்த்தி வழங்குவதால், நுகர்வோர் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக, தற்போது ''ஆவின்'' மூலமாக விநியோகம் செய்யப்படும் பால் விற்பனை விலையை உயர்த்துவதில்லை என்று அரசு முடிவெடுத்துள்ளது.

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.

* * *